
# தோழர் கார்த்திகேசன் 100



வெளியீடு
இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம்

# கல்வி - வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்

எம். கார்த்திகேசன் B.A

சரிபிழைகளைச் சொல்வதற்கு தமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரேவிதமான உற்சாகமும் உறுதியும் இருப்பதில்லை. அவை நிபுணர்களால் மட்டும் கருத்துக்கள் சொல்லப்படும் தலைப்புக்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் கல்வித்துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக்கூடிய ஒரு துறையாகக் கருதப்படுகிறது.

இது ஏனெனில் கல்வி சிறுபிள்ளைகளுடன் சம்பத்தப்படுவதாலும், அத்துடன் எந்த வயது வந்தவரும் சிறு பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவர்தான் என்று கருதுவதுமாக இருக்கலாம். இன்று கல்வி சர்வவியாபகமானதாகக் கருதப்படுகிறது என்ற உண்மையும் சிலவேளைகளில் வேறு காரணமாகவும் இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகக் சரிபிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள்.

ஆனால் பிரச்சனை என்னவென்றால், கருதப்படுவதைப் போன்று, கல்வி சர்வவியாபகமானதா? இல்லையா? என்பதே. கூடுதலாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வி சர்வவியாபக மானதாக மட்டுமல்ல, கட்டாயமானதாகவும் கருதப்படுகிறது. பரந்த அளவிற்கும் ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வலியுறுத்தக்கூடிய நாடு என்று கருதப்படும் இலங்கையை எடுத்துக்கொண்டால், இந்த நாட்டின் எல்லாப்பிள்ளைகளுமே பாடசாலைக்குப் போகின்றார்களா? இல்லை. அவர்கள் அப்படிச்

செய்திருந்தாலும்கூட, அவர்கள் எல்லோருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் ஆகக்குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கின்றார்களா? இல்லை.

இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சர்வவியாபகமான, கட்டாயமான கல்வித்திட்டதின்கீழ் இதுதான் நிலைமை என்றால் கடந்த காலத்தின் நிலையென்ன?. அன்று நிலைமை மிகவும் மோசமானதாக, ஜனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்பிற்குள் மட்டும்தான் கல்வி இருந்தது. பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதிபடைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு, அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளைச் செய்வதற்காகப் படிப்பிக்கப்படவேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு, அல்லது பாரம்பரியமாகக் கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்தான் கல்வி இருந்தது.

வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப் பிரிவினைகள்தான் கல்வி யாருக்கு என்பதை நிர்ணயித்தன. அன்று கல்வி கற்க வசதி படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலப்பிரபுக்களுக்காக இருந்தது. முதலாளித்துவ சமூக அமைப்பில் அது நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்தைய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையில் இருந்தன. யப்பானிலும், சீனாவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி ஒரு சமூகத்தின் பிரிவிற்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப்படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில், சமூகத்தில் அவரவர்களின் கடைமைக-ளிற்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற, கல்வியே கற்காத அல்லது மிகச்சிறிளவே படித்திருக்கக்கூடியதான பரந்த வெகுஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக்கொண்ட, அவர்களிலும் பார்க்கத் தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற

ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவில் பொதுப்பாடசாலைகள் எனறு கூறப்படுகின்ற, ஆனால் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்றன், ஹரோ போன்றவைகள் ஆளும் வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும், வசதிபடைத்த வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும் மட்டும்தான் கல்வியளிக்கின்றன. இவர்களில் சிலர் கல்வியின் உயர்ந்த மட்டத்தை அடைவதற்காக ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் ஆகிய சர்வகலாசாலைகளுக்குச் சென்றனர். இந்தியாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவர். அதேவேளையில் சீனாவில் "மண்டரீன்ஸ்" எனப்படுபவர்கள் படித்த பிரமுகர்களாக விளங்கினர்.

இன்று விவேகமான வாழ்வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படும் அதே வேளையில் கடந்த காலத்தில் இந்த வகையில் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஒரு ஆடம்பரப் பொருளாக, பெருமைதரும் ஓர் அணிகலனாக இது கருதப்பட்டதா?.

இல்லை இது அதிகாரத்தின் ஒரு கருவி. - அரசியல். பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி. உலகரீதியான வாக்குரிமை, உலகரீதியான கல்வி, ஜனநாயகம், மக்களின் மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற அரசாங்கங்கள் என்று சொல்லப்படுபவைகள் இருந்த போதிலும் கூட, இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியாகும்.

இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களை கீழ் நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கத்தால் பாவிக்கப்பட்ட, பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகுஜனங்களை அடக்கிச் சுரண்டப்படுவதற்கான சட்டங்களை இயற்றியவர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப் படித்தவர்களே. இந்தப் படித்தவர்கள்தான் ஆளுனர் என்ற தோரணையில் சட்டத்தை அமுல் படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் அமைப்பு

முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதெல்லாம், தெய்வ உதவி கோரப்பட்டது. கடவுளுடன் கூட யார் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாயிருந்தார் கள்? படிப்பு வாசனையற்றவர்களோ, அடிமைகளோ, விவசாயி-களோ அல்லது அரைகுறைப் படிப்பாளிகளோ அல்ல. வேதங்களை ஓதக்கூடிய அதன் புனிதமான பொருளைக் கற்கக்கூடிய, மந்திரங்களைச் சொல்லக்கூடிய படித்தவர்கள் மட்டுமே கடவுளுடன் தொடர்பு கொண்டார்கள். அது மட்டுமல்ல. தேவைப்பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக்கூடியவர்களாக இருந்தார்கள்.

"ஸ்கூல்" என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவியாக கல்வி இருந்துவந்துள்ளது என்பது காட்டப்படுகின்றது. ஓய்வு என்று பொருள்படுகின்ற "ஸ்கொலா" என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது. ஓய்வு நேரத்தைக் கொண்டிருக்கக்கூடிய உயர் வர்க்கத்தட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளதென்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகலவற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமேயில்லாத, சொத்துடைமை வர்க்கத்தைத் தவிர வேறு யாருக்கு ஓய்வு நேரம் இருந்தது?. சொத்துடைமை வர்க்கம் தான் ஆளும் வர்க்கமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. ஆகவே கல்வி மிகச் சமீப காலம்வரைக்கும் ஆளும் வர்க்கத்திற்கே உரியது.

அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன? என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காக கொடுக்கப்பட்டதுடன், ஆளும் வர்க்கத்தினால் மற்றைய வர்க்கங்களுக்கும் கொடுக்கப்பட்டாலும், வர்க்க ஆதிக்கமுள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கை, தத்துவம் ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்குப் போதிப்பதே அதன் நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவிற்கு வேலை செய்தது, ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. மற்றைய வர்க்கங்களைச் சேர்ந்த

பிள்ளைகளைப் பொறுத்தவரை சர்வவியாபகமான கல்வியின் நவீன நடைமுறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்படுகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம், உலகநீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க சமூக ஆதிக்க அமைப்பை ஏற்றுக்கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படுகின்றது.

ஆகவே வர்க்க சமுதாயத்தில் அடங்கி, ஒடுங்கி சுரண்டப்படுகின்ற மக்கள், வெகுஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப்படையை அறிந்து கொள்வது அவசியம். இதன்மூலம்தான் மக்களின் சகல பகுதினருக்கும் கல்வி வசதியை விஸ்தரிப்பது வர்க்க அடக்குமுறையிலிருந்து அவர்களை விடுவிக்கும் என்கின்ற சிந்தனை வழிநடத்தப் படாமலிருக்கமுடியும்.

இன்றைய கல்வியும் வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக்கொள்ளும்படி அவர்களை ஏமாற்றுகிறது.

''இக்கட்டுரை "களனி" ஐப்பசி - மார்கழி 1973 முதலாவது இதழில் முதலாவது பகுதியாகப் பிரசுரமாகியது.

# எங்கள் தோழன் கார்த்தி

நீர்வை பொன்னையன்

**மனிதனின் மதிக்கமுடியாத இனிய உடைமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒருதடவைதான் வாழமுடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கி விட்டேன் என்ற வருத்தம் வதைப்பதற்கு இடம் கொடுக்காதவகையில் அவன் சீராக வாழவேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழவேண்டும். உலகத்தின் தலைசிறந்த இலட்சியத்துக்காக, மனிதகுல விடுதலைப்போராட்டம் என்ற பொன்னான மார்க்கத்துக்காக என் வாழ்வுமுழுவதையும் என் சக்தி அனைத்தையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும்பொழுது கூறும் உரிமை பெறும்வகையில் அவன் வாழவேண்டும். திடீர் நோயோ அல்லது சோகவிபத்தோ வாழ்வுக்கு வெடிவைக்கக்கூடுமாதலால், மனிதன் தன் வாழ்வில் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.**

நிக்கொலாய் ஒஸ்றோவஸ்க்கிய் என்ற சோவியத் எழுத்தாளன் "வீரம் விளைந்தது" என்ற தன் நவீனத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளான்.

எங்கள் தோழன் கார்த்திகேசன் அவர்களும் தன் வாழ்வு முழுவதையும் தனது இறுதிமூச்சுவரை மனித குலத்தின் விடுதலைக்கான போராட்டம் என்ற பொன்னான இலட்சியத்துக்காக அர்ப்பணித்துள்ளார். தோழர் கார்த்தி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். அதுமாத்திரமல்ல அவர் இலங்கையின் வடபுலத்தில் இடதுசாரி இயக்கத்தைப் பரப்பிய முன்னோடிகளில் முதன்மையானவர். அவர் ஓர் ஆழமான கல்விச் சிந்தனையாளர். தலைசிறந்த ஆசிரியன். அர்ப்பணிப்புள்ள சமூகத்தொண்டன். மனித நேயப் பண்பாளர், எளிமையான தூய வாழ்வைக் கடைப்பிடித்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு உன்னத மாக்ஸிஸவாதி. அற்புதமான கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளன்.

மலேசியாவில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று உயர் கல்வியை மேற்கொள்வதற்காக இலங்கை வந்தார் மு. கார்த்திகேசன். இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரியில் அவர் மாணவனாக இருந்த காலத்திலேயே தான் விரும்பி ஏற்றுக்கொண்ட இலட்சியப் பயணமான மாக்ஸிஸ பாதையில் காலடி எடுத்து வைத்தார். அன்று ஆரம்பித்த அவரது மகத்தான நீண்ட பயணத்தில் எண்ணற்ற இன்னல்களும் இடையூறுகளும் ஏற்பட்டபோதிலும், அவர் உறுதி தளராது பரித்தியாக உணர்வுடனும், உளத் தூய்மையுடனும் விடாப்பிடியாகச் செயலாற்றி, முன்னேறிச் சென்றுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில், ஏகாதிபத்திய - பாசிஸ மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயல்பட்டவர்களில் முன்னணியில் நின்றார் கார்த்திகேசன். அந்த மாணவர் அமைப்பின் குரலான "மாணவர் செய்தி" ( ஞுவரனநவெ நேறள) என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில் ஆங்கிலம். கணிதம் ஆகிய பாடங்களைக் கற்றார். ஆங்கிலத்தில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறிய கார்த்திகேசன், அன்று இலங்கை அரசாங்க நிர்வாக சேவையில் சேர்ந்திருந்தாரேயானால் அவர் தன்கென வளமான ஒரு சொகுசு வாழ்க்கையை இலகுவில் அமைத்திருக்க முடியும். பதிலாக மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்ற இலட்சிய வேட்கையுடன் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக முன்னோடிகளில் ஒரு முக்கிய உறுப்பினராகத் தோழர் கார்த்திகேசன் தமது கட்சி வேலையைஆரம்பித்தார். அவர் கட்சியின் முழுநேர ஊழியராக இணைந்து விசுவாசத்துடன் சேவையாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக முழுநேர ஊழியர்களான தோழர்கள் ஆரியவன்ச குணசேகர, ஜசோதிஸ், ஹரி அபேகுணவர்த்தன, பி. கந்தையா, கே. இராமநாதன், பிரேம்லால் குமாரசிறி, என். சண்முகதாசன், எச்.ஜி.எஸ். ரத்னவீர, மு. கார்த்திகேசன், ஆ. வைத்திலிங்கம், பீற்றர் கெனமன் ஆகியோர் தோழர் டாக்டர் எஸ். ஏ.

விக்கிரமசிங்ஹ தலைமையை ஏற்று இயங்கினர். இக்காலகட்டத்தில் சேவையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சி முழுநேர ஊழியர்கள் அனைவரும் லட்சிய வேட்கையுடனும், பரித்தியாக உணர்வுடனும் பொரளை கொட்டா றோட் கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயத்தில் "கம்யூன்" வாழ்க்கையை மேற்கொண்டனர். இத்தோழர் ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்த சொற்ப ஊதியத்தைப் பொதுமையாக ஒன்றுசேர்த்து தங்கள் "கம்யூன" வாழ்க்கையை மேற்கொண்டனர். இது ஒரு லட்சிய கம்யூன் வாழ்க்கை முறையாகும். தோழர் கார்த்திகேசன் கொழும்பிலிருந்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார ஏடான "போவார்ட்" (குழச-றயசன) பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கார்த்தியை வடபுலத்தில் கட்சியை ஸ்தாபிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு பணித்தது. அவர் முழுமனதுடன் கட்சியை யாழ் பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்குச் சென்றார்.

யாழ். மண்ணில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஸ்தாபித்து மார்க்சிஸ கொள்யைப் பரப்பியவர்களில் தோழர் கார்த்திகேசன் முதன்மையானவர். கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிய தோழர் கார்த்தி தமது குடும்ப வாழ்க்கையை மேற்கொள்வதில் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இதன் காரணமாக அவர் யாழ் இந்துக் கல்லூரியில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். யாழ் சமூகத்தின் மிகக் கொடுமையான பழமைவாத வைதீக இந்துக்கள் செறிந்து வாழ்கின்ற வண்ணார்பண்ணையில், யாழ் இந்துக் கல்லூரி அமைந்திருந்தது. இப்படிப்பட்ட ஒரு சமூகப் பின்னணியைக் கொண்ட கல்லூரியில் ஒரு மார்ஸிசவாதி சேவையாற்றவது ஒரு பெரும் சவாலாக இருந்தது. தோழர் கார்த்தி மன உறுதியுடன் இந்தச் சவாலை ஏற்று பணியாற்ற முன்வந்தார். அவர் இக்கல்லூரியில் தமது அந்தரங்க சுத்தியான சேவையினால் நற்பிரஜைகளாக பெரும் எண்ணிக்கையினரை உருவாக்கியுள்ளதுடன், பெரும் தொகையான முற்போக்கு சிந்தனை கொண்டவர்களையும் உருவாக்கினார். இக்காலகட்டத்தில் தமது அர்ப்பணிப்பான சேவைமூலம் தோழர் கார்த்தி மாணவர் சமூகத்தின்

அமோக ஆதரவைப் பெற்றார். அவரைச்சுற்றி ஒரு பெரும் முற்போக்கு மாணவர் படையணி உருவாகியது. அதுமாத்திரமல்ல தமது புனிதமான ஆசிரியத் தொண்டின் மூலமும், பரித்தியாக உணர்வுடைய சமூகத் தொண்டின் மூலமும் தோழர் கார்த்திகேசனின் மாாக்ஸிசக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத யாழ் சமூக பழைமைவாத வைதீக இந்துக்களின் கணிசமான தொகையினரது மதிப்பையும், ஆதரவையும் அவரால் பெற்றுக்கொள்ளமுடிந்தது. இதன் காரணத்தாலேதான் அவர் அன்றைய காலகட்டத்தில் யாழ் மாநகரசபைத் தேர்தலில், மிகவும் பணபலம் வாய்ந்த அப்பிரதேசவாதியான ஒரு பெரும் புள்ளியைத் தோற்கடித்து மாநகரசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, யாழ் மாநகர மக்கள் அனைவருக்கும் சேவை செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

கல்வி ஒரு தேசத்தின் வளத்திற்கும் மேம்பாட்டிற்கும் அத்தியாவசியமானது. ஆனால் அத்தேசத்திலுள்ள சகல தரப்பினருக்கும் கிடைக்கக்கூடிதாக அக்கல்விமுறை அமைந்திருக்கவேண்டும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள கல்விமுறை, அந்நாடுகளிலுள்ள சமூகத்தின் ஒரு சிறுபிரிவினருக்கு மட்டும்தான், அதாவது சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கு மாத்திரம்தான் கல்வி கிடைக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. அது மாத்திரமல்ல இந்த நாடுகளிலுள்ள கல்விக்கும் நாட்டின் பொருளாதார உற்பத்திக்கும் எதுவித தொடர்புமற்றதாகக் கல்விமுறை அமைந்துள்ளது. இக்கல்விமுறை அகற்றப்பட்டு. சமூத்தில் சகலருக்கும் கல்வி கிடைக்கக்கூடியதாக வும், நாட்டின் உற்பத்தித்துறைக்கு நெருங்கிய தொடர்புள்ள சோசலிஸ கல்விமுறை அமைந்திருக்க வேண்டும் என்ற கல்விச் சிந்தனை உடையவராக இருந்தார் தோழர் கார்த்தி. இதற்காகத்தான் அவர் தமது வாழ்நாளில் போராடினார்.

ஆசிரியரும் டாக்டரும்தான் ஒரு சமூகத்தின் இருவிழிகள். ஒரு சமூகத்தை ஆரோக்கியமுள்ளதாக உருவாக்குவதற்கு ஆசிரியரும் டாக்டரும் தியாக உணர்வுடன் பணியாற்றவேண்டும் எனறு தோழர் கார்த்தி அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். ஒரு

சமூகத்தை விழிப்படையச் செய்து அதை மேம்படுத்துவதற்கு ஆசிரியனுடைய பங்கு அத்தியாவசியம். அன்று யாழ் சமூகத்தின் விழிப்புக்கும் மேம்பாட்டுக்குமாகப் பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகள் பலர் இருந்துள்ளனர். இவர்களில் பலர் சுதந்திரம், ஜனநாயகம், மனிதநேயம், சமத்துவம் பற்றிய சிந்தனைகளை வலியுறுத்தி யாழ் மண்ணில் விதைத்துப் பரப்புவதில் முழுமூச்சாக ஈடுபட்டனர். இவர்களில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஹன்டி பேரின்பநாயகம், பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் சிவபாதசுந்தரம், யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர்களான அ. வைத்திலிங்கம், மு. கார்த்திகேசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் மார்க்ஸிச வாதிகளாகவும் இடதுசாரிகளாகவும் இருந்தனர். இவ்வாசிரியப் பெருந்தகைகள் தமது அர்ப்பணிப்பான சேவைமூலம் யாழ் சமூகத்தின் பெருமதிப்பைப் பெற்றதுடன். இவர்கள் உத்தம ஆசிரியர்களுக்கான உதாரண புரு'ர்களாகத் திகழ்கின்றனர்.

தோழர் கார்த்திகேசன் வடபுலத்திற்குச் சென்றபொழுது, யாழ் சமூகத்தின் எந்தப்பகுதி மக்களுக்கு, அதாவது சமூகத்தின் எந்த மட்டத்திலுள்ள மக்களுக்கு தமது சேவை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது என்பதைச் சரியாக இனம்கண்டு. அப்பகுதி மக்களிடையே அவர் தமது அரசியல் சேவையை ஆரம்பித்தார். யாழ் சமூகத்தில் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்டு, சுரண்டிச் சூறையாடப்பட்டுக் கொண்டிருந்த சமூகத்தினர், நிலமற்ற விவசாயிகள், தொழிலாளர் ஆகியோர் மத்தியில் தமது அரசியல் வேலையை தோழர் கார்த்தி ஆரம்பித்தார். அவர் தம்மைப்போல் அன்று இதயசுத்தியுடன் சேவையாற்ற முன்வந்த தோழர்கள் அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், எம்.சி.சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், வி.ஏ. கந்தசாமி, டாக்டர் சீனிவாசகம், ஆர்.ஆர். பூபாலசிங்கம், எஸ் மகாலிங்கம், கே. ஜனகா ஆகியோருடன் இணைந்து வேலை செய்தார். இவர்களுடன் தோழர்கள் சுபைர் இளங்கீரன், கே. டானியல், டொமினிக் ஜீவா, அரசடி இராசையா, எஸ் பொன்னுத்துரை ஆகியோரும் நானும் பின்னர் இணைந்து கொண்டோம்.

யாழ் குடாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவனமயமாக்கப் படுவதற்கு முன்னர் யாழ் ஆஸ்பத்!ிரிக்குப் பின்னாலுள்ள விக்டோரியா றோட்டிலமைந்திருந்த, தோழர் கார்த்தியினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அவருடைய வீட்டில்தான் கட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அநேகமாக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலையிலும் கட்சியின் அரசியல் வகுப்புக்கள் அல்லது கூட்டங்கள் நடாத்தப்படும். 1947 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் நடந்த அரசியல் வகுப்பில் நான் பங்குபற்றினேன். அந்த வகுப்பை எடுத்தவர்தான் தோழர் கார்த்திகேசன் என்பதை வகுப்புமுடிந்த பின்னர் அறிந்தேன். "மனித சமுதாய வளர்ச்சியின் வரலாற்றை" மிக இலகுவானமுறையில் தெளிவாக எடுத்துக் கூறினார் தோழர் கார்த்தி. விடயம் மிகவும் கடினமானதாக இருந்தாலும் அதை மிகவும் எளிமையாகவும் நாம் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் சுவராசியமானமுறையிலும் எடுத்துக்கூறினார் தோழர் கார்த்திகேசன். கொழும்பிலிருந்து கட்சித் தலைவர்கள் வருகின்ற பொழுதெல்லாம் கார்த்தியின் வீட்டிலேதான் தங்குவார்கள்.

பின்னர் கட்சிக் காரியாலயம் வின்சர் படமாளிகைச் சந்திக்குச் சமீபமாக உள்ள ஸ்ரான்லி வீதியிலமைந்துள்ள மஸ்கன் கட்டிடத்திற்குப் பக்கத்திலுள்ள இரண்டுமாடிக் கட்டிடத்தின் மேல்மாடியில் இயங்கியது. கட்சி 1963 ல் பிளவுபட்ட பின்னர் ஸ்ரான்லி வீதியிலுள்ள "மொம்ஸாக் பில்டிங்" என்று அழைக்கப்பட்ட கட்டிடத்தின் மேல்மாடியில் கட்சி அலுவலகம் இயங்கியது. இதன் பின்னர் யாழ் வீதியிலமைந்துள்ள ஒரு வீட்டிலும், பின்னர் ஆஸ்பத்திரிச் சந்திக்கு அருகாமையிலமைந்த இனசூரன்ஸ் கூட்டுத்தாபனத்திற்கு முன்னாலிருந்த கட்டிடத்திலும், இதையடுத்து ஸ்ரான்லி வீதி பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முன்னாலிருந்த யாழ் புத்தக நிலையக் கட்டிடத்திலும் கட்சி அலுவலகம் இயங்கியது. கட்சிக் காரியாலயம் வாடகைக் கட்டிடங்களில் இயங்கியதைப் போல தோழர் கார்த்திகேசனின் குடும்பமும் விக்ரோரியா றோட், கலட்டி அம்மன் கோவிலடி, நாச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம்

வீதி, மறுபடி கலட்டிப் பிள்ளையார் கோவிலடி, நாச்சிமார் கோவில் முன்னமைந்த இராமநாதன் வீதி, வண்ணார் பண்ணையில் அமைந்த வாடகை வீடு ஆகியவற்றில்தான் வாழ்ந்துவந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியைத் ஸ்தாபித்து அதைக் கட்டி எழுப்பும் வேலையில் முழுமூச்சுடன் ஈடுபட்ட தோழர் கார்த்தி, அதேவேளை தான் ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்து முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். அவர் விசால உள்ளம் படைத்தவராக இருந்ததுடன், வற்றாத அன்புள்ளம் கொண்டவர். நேர்மையான தூய எளிமையான வாழ்வைக் கடைப்பிடித்தவர். கட்சியினதும்; கட்சி உறுப்பினர்களினதும் நலனை தனது சொந்த நலனாகக் கருதிச் செயலாற்றியவர். தான் வரித்துக்கொண்ட தத்துவத்தையும் தனது வாழ்வையும் இணைத்து செயற்பட்டவர். அவர் சரியான கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வந்ததுடன், தவறான கருத்துக்களுக்கும் செயற்பாடுகளும் எதிராக உறுதியாக விடாப்பிடியாகப் போராடியவர். கட்சிக்குள் காலத்துக்குக் காலம் தலைதூக்கிய அதிதீவிர இடதுசாரிப் போக்கிற்கும், வலதுசாரி சந்தர்ப்பவாதப் போக்கிற்கும் எதிராக தத்துவார்த்த ரீதியாக உறுதியாகவும், விடாப்பிடியாகவும் போராடி கட்சியை சரியான வழியில் செல்ல நெறிப்படுத்தியவர் தோழர் கார்த்தி. காலத்திற்கு காலம் சில சந்தர்ப்பவாதிகள் கட்சியில் பிளவை ஏற்படுத்திய பொழுது, தோழர் கார்த்தி நிதானமாகவும் உறுதியாகவும் நின்று தத்துவார்த்தரீதியில் நின்று போராடி கட்சியை நெறிப்படுத்தினார். கட்சி உறுப்பினர்களையும் கட்சி ஊழியர்களையும் தட்டிக்கொடுத்து வளர்தெடுப்பதில் கரிசனையுடன் செயற்பட்டார்.

ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தூய்மையான எளிமையான ஒரு கம்யூனிஸ்டுக்குரிய சீரிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தவர் தோழர் கார்த்தி. இந்தியாவின் பிரதமராக இருந்த லட்சிய புருஷர் லாலபகதுர் சாஸ்திரி அவர்கள் வாழ்ந்த காலத்திலும் அவர் இறந்தபின்னரும் அவரது குடும்பம் வறுமை நிலையிலேயே இருந்தது. சாஸ்திரிக்கு எந்தவித வங்கிக் கணக்கோ பெரும் சொத்தோ இருந்ததில்லை. தமிழ் நாட்டின் கர்மவீரர் காமராஜர் மறைந்தபின் அவரது தாயார் வாடகை வீட்டிலேதான் வாழ்ந்தார்.

மேற்குவங்க முன்னாள் முதல்வர் தோழர் ஜோதிபாசு தேசிய உடையில் எளிமையான வாழ்க்கை நடாத்தினார். அவர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மெய்ப்பாதுகாவலாகள் எவருமின்றி சுயாதீனமாக வாழ்ந்தவர். கேரளாவின் முதல்வராக இருந்த தோழர் நம்பூதிரிபாட் தமது இறுதிக்காலத்தில் தாம் எழுதிய நூல்கள் மூலம் கிடைத்த றோயல்ரி (உரிமைக் கட்டணம்) மூலம்தான் தாம் வசித்த வீட்டு வாடகைப் பணத்தைக் கட்டிவந்தார். வியட்நாம் மக்களின் மகத்தான தலைவர் ஹோசி மின் அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது, அந்த வைபவத்திற்குச் செல்வதற்கு உடுப்பு இல்லாமல் தனது சகாவின் உடுப்பை இரவலாக வாங்கி உடுத்துச் சென்றார். அவர் இறக்கும் வரை மூன்றேமூன்று உடைகளை மாதத்திரமே தனக்குச் சொந்தமாக வைத்திருந்தார். அவருக்கு எதுவித சொத்தோ செல்வமோ என்றுமே இருந்ததில்லை. அவரது வற்றாத செல்வம் வியட்நாமிய மக்கள்தான். இவ்வாறான லட்சிய புரு'ர்களைப்போல தோழர் கார்த்தியும் தூய்மையான வாழ்வைக் கடைப்பிடித்தவர். அவர் எதுவித சொத்தையும் சேகரித்தவருமல்ல, வைத்திருந்தவருமல்ல. வறுமையில் செம்மை கண்டவர். அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்றவர் தோழர் கா்ாத்தியின் மனைவி. இருபதாம் நூற்றாண்டின் தத்துவ மேதை கார்ல் மாாக்ஸ் அவர்களது சாதனைகளுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாக இருந்தவர் அவரது மனைவி ஜென்னி. மகத்தான தலைவர் லெனின் அவர்களது புரட்சி நடவடிக்கைகளுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்தவர் அவரது வாழ்க்கைத்துணைவி குருப்ஸ்கயா. அதேபோல் தோழர் கார்த்தியின் உன்னத வாழ்க்கைக்கு உறுதுணையாகவும் பங்காளியாகவும் இறுதிவரை இருந்தவர் அவரது வாழ்கைத்துணைவியார் வாலாம்பிகை என்பது யாவரும் அறிந்த உண்மை.

தனது சொந்த நலனிலும் பார்க்க. தனது குடும்ப நலனிலும் பார்க்க கம்யூனிஸ்ட் கட்சியின் நலனே பெரிதெனக் கொண்டு அதற்காக இரவும்பகலும் இடையறாது உழைத்தவர் தோழர் கார்த்தி. கட்சியை வடபுலத்தில் ஸ்தாபித்தவர்களில் முதன்மை யானவர். அதனைக் கட்டி வளர்ப்பதிலும் தோழர் கார்த்தி

முனைப்பாகச் செயற்பட்டார். கட்சிக்கிளைகளை யாழ் நகரத்தில் பலபகுதிகளில் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஸ்தாபித்தார். அத்துடன் யாழ் குடாநாட்டின் பல்வேறுபகுதிகளிலும் கட்சிக் கிளைகளை நிறுவுவதில் முனைந்து அதில் குறிப்பிடத் தக்கதான வெற்றியையும் நிலை நாட்டினார். யாழ் நகரின் கொட்டடி, ஆரியகுளத்தடி, வண்ணார்பண்ணை, பலாலி வீதி, அரியாலை, குருநகர், முஸ்லிம் வட்டாரம், நல்லூார் போன்ற இடங்களிலும் குடாநாட்டின் முக்கிய இடங்களான காங்கேசன்துறை, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடி. கரவெட்டி, மட்டுவில், சங்கானை, சுன்னாகம், கோப்பாய் போன்ற இடங்களிலும் கட்சிக் கிளைகளை அமைப்பதில் கரிசனையுடன் முயற்சித்து இம்முயற்சியில் கம்யூனிஸ்ட் கட்சி பெருமைப்படக்கூடியதான அளவில் வெற்றிகாண வழிவகை செய்தார். இப்பிரதேசங்களில் தோழர் கார்த்தியின் உதவியுடன் கிரமமாக குறிப்பிட்ட காலகட்டத்திற்கு அரசியல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இப்பகுதிகளில் கட்சிப் பத்திரிகைகளும் கிரமமாக குறிப்பிட்ட காலகட்டத்திற்கு விற்பனையாகின. இப்பிரதேசங்களிலுள்ள கட்சி உறுப்பினர்களை அரசியல் தத்துவார்த்த ரீதியில் வளர்த்தெடுப்பதில் தோழர் கார்த்தி அக்கறையுடன செயற்பட்டார். கட்சி உறுப்பினர்களுடன் இதயபூர்வமாகத் தோழமையுடன் பழகியதன்மூலம் அவர்களது பேரன்பையும் பெருமதிப்பையும் தோழர் கர்ாத்தி பெற்றார். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் "எங்கள் தோழர் கார்த்தி" என்று உரிமையுடனும் வாஞ்சையுடனும் அவரை அழைத்து வந்துள்ளனர்.

கட்சிப்பணிகளை உறுப்பினர்கள் செய்யும்பொழுது கட்சியின் தலைவர்களான தோழர்கள் கார்த்தி, எம்.சி.சுப்பிரமணியம், இராமசாமி ஐயர் ஆகியோர் இணைந்து உற்சாகத்துடன் வேலை செய்வர்ாகள். கட்சிக்கு நிதிசேகரிப்பதிலும் கட்சிப் பத்திரிகையை யாழ் பஸ்நிலையத்திலும் கடைத்தெருவிலும் விற்பதிலும் கட்சி உறுப்பினர்களான எம்முடன் இம் மூவரும் சேர்ந்து இயங்குவார்கள். கட்சிப் பிரச்சாரக் கூட்டங்களையும் மேதினக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்வதிலும் ஏனைய தயாரிப்பு வேலைகளிலும் இம் மும்மூர்த்திகள் ஊக்கத்துடன் எம்முடன் செயற்படுவர்.

இககூட்டங்களுக்கான போஸ்டர்களை ஒட்டுவதிலிருந்து கூட்டத்துக்கான மேடைகளை அமைப்பதுவரை இவர்கள் எம்முடன் சேர்ந்து வேலை செய்வார்கள். அதுமாத்திரமல்ல கூட்டம் முடியும்வரை இவர்கள் எம்முடன் நின்று மேடை கழற்றி அகற்றப்படும்வரை எம்முடன் சேர்ந்து உழைப்பார்கள். கட்சியின் கூட்டச் சுவரொட்டிகளை (போஸ்டர்கள்) இரவுவேளைகளில் நாங்கள் ஒட்டும்பொழுது பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்கநேரிடும். இதைச் சமாளிப்பதற்கு இம்மூவரும் இரவுமுழுவதும் யாழ்நகர வீதிகளில் எம்முடன் அலைந்து திரிவார்கள். முக்கிய இடங்களில் சுவரொட்டிகளைப் பொலிஸாரோ, கட்சி விரோதிகளோ கிழித்து நாசமாக்காமல் இருக்கும் வகையில் உயரமான இடங்களில் ஒட்டவேண்டிய நிலமை ஏற்படும். "தோழர்! என்னுடையதோளில் ஏறிநின்று போஸ்டரை உயரத்தில் ஒட்டும்" என்று வாட்டசாட்டமான உடல்வாகைக் கொண்ட தோழர் இராமசாமி ஐயர் கட்டளையிடுவார். யாழ் சுண்டிக்குளி பிரதான வீதியில் அமைந்துள்ள கொன்வென்ட் சுவர் "கம்யூனிஸ்ட் கட்சியின் டயறி" என்று அழைக்கப்பட்டது. 1953 ம் ஆண்டின் ஹர்த்தால் காலத்திலிருந்து 1970ம் ஆண்டுவரையான காலப்பகுதிவரை முதலாளித்துவ யு. என். பி எதிர்ப்பு சுலோகங்கள் சிவப்பு மையினால் பெரிய எழுத்துக்களில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவிருக்கும்.

யாழ் வின்சர் தியேட்டருக்கு அண்மையில் கட்சி அலுவலகம் இயங்கிய காலகட்டத்தில், கட்சிக் கூட்டங்கள் முடிந்தபின்னர் அல்லது கட்சிப் பத்திரிகை விற்பனைக்குப்பின்னர் தேனீர் குடிப்பதற்கு நாங்கள் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சிங்ககிரி பேக்கரிக்கு அருகாமையிலுள்ள ஒரு சிங்களவரின் கடைக்குச் செல்வது வழக்கம். ஏனிந்த குறிப்பிட்ட கடைக்கு மாத்திரம் நாஙகள் தேனீர் குடிக்க வருகிறோம்? என்று நான் ஒருநாள் தோழர் கார்த்தியைக் கேட்டேன். " பிளேன் ரீ, பொடி நடை, பீகொக் சிகறட் இவைதான் கம்யூனிஸ்ட்டுக்களான எங்களுக்கு இங்கு கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன". என்று கார்த்தி நகைச்சுவையுடன் கூறியதுடன், இவற்றை நகரிலுள்ள ஏனைய தமிழ்த் தேனீர்க் கடைகள் எங்களுக்குத் தரமாட்டார்கள். இந்த

ஒரே சிங்களக் கடையில்தான் எங்கள் அனைவருக்கும் தேனீர் கிடைக்கும் என்று அர்த்தபுட்டியுடன் கூறினார். இத்தருணத்தில்தான் சாதி ஒடுக்குமுறையின் தார்ப்பரியத்தை என்னால் புரிந்துகொள்ளமுடிந்தது. சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக தோழர் கார்த்தியின் வழிகாட்டுதல்களுடன் போராடிவந்த கம்யூனிஸ்ட் கட்சியை அன்றைய தமிழ் மேட்டுக்குடியினர் "நளக்கட்சி" என்ற திமிர்த்தனத்துடன் கூறினர். கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் கார்த்திகேசனதும் வழிகாட்டுதலுடன் சிறுபான்மைத்தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆகிய ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு, சாதி ஒடுக்குமுறையைத் தகர்ப்பதற்காக சாத்வீகமான முறையிலும் ஆயதம் தாங்கிய முறையிலும் பல போராட்டங்கள் யாழ் மண்ணில் நடாத்தப்பட்டு குறிப்பிடப்பட்ட வெற்றிச்சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியெழுப்புவதில் தோழர் காத்திகேசன் கரிசனை காட்டியதோடல்லாமல், கட்சியின் வெகுஜன அமைப்புக்கனான தொழிற்சங்கம், வாலிப சங்கம், சீன, சோவியத், வியட்நாமிய நட்புறவுச் சங்கங்கள், ஆசிரிய சங்கம் போன்றவற்றையும் கட்டி எழுப்பவதில் ஆர்வத்துடன் செயற்பட்டார். அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் நான் இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளனத்தின்(ஊ.வு.ரு.கு) வடபிராந்திய பிரதிநிதியாக செயற்பட்ட காலகட்டத்தில், தோழர்கள் கார்த்திகேசனும் , வீ.ஏ. கந்தசாமியும் எனக்கு வழிகாட்டிகளாகவும் போராட்டத் தோழர்களாகவும் செயற்பட்டார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபை (ஊ.வு.டீ) தொழிற்சங்கம், காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் தொழிலாளர் சங்கம், பீடித் தொழிலாளர் சங்கம், வல்லை நெசவாலைத் தொழிலாளர் சங்கம், ஆனையிறவு உப்பளத் தொழிலாளர் சங்கம், ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், மில்வைற் சோப் தொழிலாளர் சங்கம், யாழ்நகர சாய்ப்புச் சிப்பந்திகள் சங்கம், வடபிரதேச சினிமா படமாளிகைத் தொழிலாளர் சங்கம் ஆகியவை இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்திருந்தன. வடபிரதேசத்தில் இத்தொழிற்சங்கங்களை ஸ்தாபிப்பதிலும் வலுப்படுத்துவதிலும் நாம் பெரும் நெருக்கடிகளுக்கும்

பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டியிருந்தது. இந்த இக்கட்டான வேளைகளில் தோழர் கார்த்தி எமக்கு அர்த்தபுஷ்டியான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் நல்கி பெரும் உறுதுணையாகச் செயல்பட்டார். இத்தொழிற்துறைகளில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களது உரிமைகளையும் கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்கு நாம் மிகக் கடினமான நீண்டகாலப் போராட்டங்களை நடாத்தவேண்டியிருந்தது. இந்தத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்ட காலகட்டங்களின்போது இத்துறைகளைச் சார்ந்த நிர்வாகத்தினரதும், பொலிஸ்தரப்பினரதும் அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைக்கும் தொழிலாளர்கள் முகம்கொடுக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளில் தோழர் கார்த்திகேசன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், நெறிப்படுத்தல்களையும் வழங்கி இப்போராட்டங்கள் வெற்றியீட்டவதற்கு பெரும்பங்காற்றியுள்ளார். இதன் விளைவாக இத்தொழிற் சங்கங்களின் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின ஊர்வலங்களிலும் கட்சியின் பல போராட்டங்களிலும் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றி வெற்றிவாகை சூட பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் துணை ஸ்தாபனமான வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிப சங்கத்தை ஸ்தாபிப்பதில் தோழர் கார்த்தி முனனணியில் நின்று செயலாற்றினார். இவ்வாலிபர் சங்கம் வடபிரதேசத்தில் கட்சியின் செயற்பாடுகளுக்கும், தீண்டாமை ஒழிப்பு போராட்டத்திற்கும், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கும் உறுதுணையாக நின்று பெரும் பங்காற்றியுள்ளது. இவ்வாலிப சங்கத்தின் கிளைகள் யாழ் நகரின் பல பகுதிகளில் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த கொட்டடி, நாவாந்துறை, யாழ் பலாலி வீதி, கொழும்புத்துறை, அரியாலை, ஆரியகுளம், முஸ்லிம் வட்டாரம், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. அதேவேளை யாழ் நகரத்துக்கு வெளியே நெல்லியடி, பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி துன்னாலை, காங்கேசன்துறை, கலட்டி, தெல்லிப்பளை, சுண்ணாகம், இணுவில், சங்கானை, சுழிபுரம், மட்டுவில், கொடிகாமம், அச்சுவேலி

ஆவரங்கால் ஆகிய இடங்களில் வாலிப சங்கக் கிளைகள் நிறுவப்பட்டன. இக்கிளைகளில் கட்சியின் அரசியல் வகுப்புக்கள் அதாவது மார்க்ஸிச - லெனினிஸ - மாஓசேதுங் சிந்தனை பற்றிய அரசியல் வகுப்புக்களும் அரசியல் முகாம்களும் நடாத்தப்பட்டன. இதன் விளைவாக இவ் வாலிப சங்க கிளைகளின் உறுப்பினர்கள் கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய சகல வெகுஜனப் போரட்டங்களிலும் உணர்வுபூர்வமாகக் கலந்து உரம் பெற்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்கத்தின் வடபிரதேச மகாநாடுகளையும், அரசியல் முகாம்களையும் நடாத்துவதற்கு உருப்படியான ஆலோசனைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கு தோழர் கார்த்தி அளப்பரிய பங்கினை வழங்கியுள்ளார். இன்றும் இப்பிரதேசங்களிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் தோழர் கார்த்தியை மறக்காமல் தமக்கு இன்னல்கள் நேரிடும் வேளைகளில் நினைவுகூருகின்றனர். வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்திற்கு நானும் தோழர் கே. ஏ. சுப்பிரமணியமும் தலைமைதாங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பல போராட்டங்களையும் நடாத்தியுள்ளோம்.

வடபிரதேசத்தில் குறிப்பாக அறுபது எழுபதுகளில் வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, வவுனிக்குளம், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் விவசாய சங்கங்களை அமைத்து அபபகுதிகளிலுள்ள விவசாயிகளின் உரிமைகளுக்காக பல போராட்டங்களை நடத்தி பல வெற்றிகளை ஈட்டியுள்ளோம். இப்பிரதேசங்களிலுள்ள உயர் பதவி வகிக்கின்ற விவசாய நீர்ப்பாசன உயர் அரசாங்க அதிகாரிகளதும் பெருநில உடைமையாளர்களதும் அதிகாரத் திமிருக்கும் பாரபட்சங்களுக்கும் எதிராகப் போராடி வெற்றி பெற்றுள்ளோம். இப் போராட்டங்களில் தோழர் வீ.ஏ. கந்தசாமி தனது தீவிர போராட்ட உணர்வால், தமது வாதத் திறமையை நன்கு பயன்படுத்தி விவசாயிகளின உரிமைகளை வென்றெடுக்க எம்முடன் இணைந்து பெரும் பங்காற்றியுள்ளார்.

எமது நாட்டில் இனவாத அடிப்படையில் ஆசிரிய சமூகத்தைப் பிளவுபடுத்தி சிங்கள, தமிழ் பகுதிகளில் சிங்கள ஆசிரியர் சங்கங்களையும், தமிழ் ஆசிரியர் சங்கத்தையும் நிறுவிச் செயற்பட்டு வந்துள்ளனர். இந்த இனவாத அணுகுமுறைக்கு மாற்றீடாக "ஜாதிக்க குரு சங்கமய" (தேசிய ஆசிரியர் சங்கம்) என்ற முற்போக்கு சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றது. இதன் கிளையை வடபிரதேசத்தில் நிறுவி ஆசிரிய சமூகத்தை ஒன்றிணைக்கும் நோக்குடன் தோழர் கார்த்தி செயற்பட்டு வந்துள்ளார்.

தோழர் கார்த்தியுடன் அ.வைத்திலிங்கம், ஐ.ஆர். ஆரியரத்தினம், எம்.பி. செல்வரத்தினம், அ. சிவலிங்கம். எம். குமாரசாமி, எஸ்.பி. நடராஜா ஆகியோர் இணைந்து இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தீவிரமாக உழைத்தனர்.

இந்த நாட்டில் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகளை முறியடித்து ஒழித்துக்கட்ட வேண்டுமென்றால் முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அதாவது இடதுசாரிகள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை முன்வைத்து தோழர் கார்த்தி போராடி வந்துள்ளார். பெருமுதலாளித்துவக் கட்சியான யு.என்.பி ஐ முறியடித்து ஒழித்துக்கட்ட வேண்டும் என்றால் சகல முற்போக்கு சக்திகளும் அதாவது இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளும் ஏனைய சிறிய இடதுசாரிக் கட்சிகளும் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாமல் நிரந்தரமான ஒரு பொது வேலைத்திட்டத்தின்கீழ் ஐக்கியப்பட்டு செயலாற்ற வேண்டுமென்று தோழர் கார்த்தி வலியுறுத்தி வந்துள்ளார். அதேவேளை இந்த ஐக்கியம் இடதுசாரிக் கட்சிகளின் தலைமை மட்டங்களில் மாத்திரமல்லாமல் அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியிலிருந்தே கட்டி எழுப்பப்படவேண்டும் என்று கார்த்தி வலியுறுத்தி வந்தது மாத்திரமல்லாமல் அதற்காகப் போராடியும் வந்துள்ளார். அதாவது இலங்கையில் ஒரு இடதுசாரிகளின் ஐக்கிய முன்னணியின் மூலம்தான் முதலாளித்துவ யு.என்.பி தலைமையிலான பிற்போக்கு சக்திகளை முறியடித்து ஒரு

முற்போக்கான அரசை நிறுவ முடியும் என்று கூறிவந்துள்ளதுடன் இதற்காக அந்தரங்கசுத்தியுடன் போராடியும் வந்துள்ளார் தோழர் கார்த்தி.

கம்யூனிஸ்டுக்கள் வரட்டுச் சிந்தாந்த வாதிகள், அவர்கள் கலாரசனை அற்றவர்கள், அவர்கள் மத்தியில் சிறந்த எழுத்தாளர்களோ, கலைஞர்களோ இல்லை என்ற கருத்தை மக்கள் மத்தியில் பரப்புவதில் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகள் ஈடுபட்டு வந்துள்ளன. இது ஒரு தவறான பொய்ப் பிச்சாரமாகும். பிற்போக்குச் சக்திகளின் இப்பொய்ப் பிரச்சாரத்தை தகர்க்கும் வகையில் அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் அணியைச் சார்ந்த முற்போக்கு எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஸ்தாபனரீதியாக ஒன்றுதிரண்டு கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வெகுஜன அமைப்புக்களும் நடத்திய வெகுஜனப் போராட்டங்களில் உணர்பூர்வமாகப் பங்குகொண்டு அந்த மக்களின் போராட்ட அனுபவங்களை கலைத்துவத்துடன் மறுபரிசவிப்புக்கு உள்ளாக்கி தரமான சிரு'டிகளைப் படைத்துள்ளார்கள். இதுதான் மக்கள் இலக்கியம் அல்லது முற்போக்கு இலக்கியம் என்று கூறப்படுகின்றது. இதற்குப் பின்னணியில் நின்று செயற்பட்டவர்களில் தோழர் கார்த்தி முதன்மையானவர். இந்த எழுத்தாளர்களுக்கு வழிகாட்டி வளர்தெடுத்தவர் கார்த்தி. அவரே ஒரு சிறந்த மாக்ஸிச இலக்கிய விமர்சகராகவும் ஆங்கிலக் கவிதைகள் புனைபவராகவும் இருந்துள்ளார். வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகவிருந்த சிறந்த மக்கள் இலக்கியப் படைப்பாளிகளான தோழர்கள் கே. டானியல், டொமினிக் ஜீவா, எஸ்.பொன்னுத்துரை, என்.கே.இரகுநாதன், கவிஞர் பசுபதி, இளங்கீரன், எஸ்.அகஸ்தியர் ஆகியோருடன் நானும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிரதான உறுப்பினர்களாகச் செயற்பட்டோம். நாம் அறுபது எழுபதுகளில் வடபிரதேசத்தில்

நடந்த தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திலும், தொழிலாளர்களது போராட்டங்களிலும் நேரடியாகப் பங்குபற்றியதுடன் இந்தப் போராட்ட உணர்வின் உந்துதலினால் தரமான மககள் இலக்கிய சிருஷ்டிகளைப் படைத்தோம். இந்த எழுத்தாளர்களை சித்தாந்தரீதியில் நெறிப்படுத்தி தரமான முறபோக்கு இலக்கியப் படைப்புக்களை உருவாக்குவதற்கு வழிவகுத்தவர் தோழர் கார்த்தி.

**தோழர் பெத்யூன் அவர்களின் உணர்வு தம்மைப்பற்றிய சிந்தனை ஒன்றுமின்றி பிறருக்கான அவருடைய பூரண தியாகம், தமது வேலையில் அவர் கொண்டிருந்த எல்லையற்ற பொறுப்புணர்ச்சியிலும் தோழர்கள்மீதும் மக்கள்மீதும் ,அவர் வைத்திருந்த எல்லையற்ற இதய - ஆர்வத்திலும் காணப்பட்டது. ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் அவரிடமிருந்து அதைக் கற்றுக்கொள்ளவேண்டும்.**

அவருடைய எள்ளத்தனையும் சுயநலமற்ற உணர்வை **நாம் எல்லோரும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இந்த உணர்வைக்கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு மிகப்பயனுள்ளவராக வாழமுடியும். ஒருவருடைய திறமை பெரிதாக அல்லது சிறிதாக இருக்கலாம். ஆனால் இந்த உணர்வு அவருக்கு இருந்தால், அவர் உன்னத சிந்தையும் தூய்மையும் உடையவராக, ஆத்மீக பலமுடையவராக, கொச்சை நப்பாசைகளைக் கடந்த ஒரு மனிதனாக மக்களுக்குப் பயனுள்ள ஒரு மனிதராக இருப்பார்.**

"தோழர் பெத்யூனின் நினைவுக்காக" என்ற ஒரு கட்டுரையில், மகத்தான தலைவர் மாஓ சேதுங் அவர்கள் கனடிய டாக்டர் நோர்மன் பெத்யூனின் மக்களுக்கான அர்ப்பணிப்புப் பற்றி மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதேபோல் எங்கள் தோழன்

கார்த்தியும் மக்களுக்கும் கட்சிக்கும் சேவைசெய்வதில் தம்மை உணர்வுபூர்வமாக அர்ப்பணித்தவர். ஆகவே அவரது எண்ணத்தையும் சுயநலமற்ற உணர்வையும் நாமெல்லோரும் தோழர் கார்த்தியிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

நீர்வை பொன்னையன்
நீண்ட கால கட்சித் தோழரும், தொழிற்சங்கவாதியும்,
முற்போக்கு எழுத்தாளரும் ஆவார்.

> இக்கட்டுரை நவம்பர் 2002 ல் வெளியிடப்பட்ட
> "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்"
> என்னும் நூலில் பிரசுரமாகியது.

# எம் மத்தியில் - எம் கார்த்திகேசன்

எம். குமாரசாமி

யாழ் குடாநாட்டின் அரசியல், கல்வி, கலாச்சாரத் துறைகளில் 1944 ம் ஆண்டு தொடக்கம் 1977 ம் ஆண்டுவரை தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவரும், இத்துறைகளின் முன்னேற்றங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அவற்றை முன்னெடுத்துச் சென்ற அறிஞர்களில் காலஞ்சென்ற கார்த்திகேசன் ஒரு தனியிடத்தைப் பெற்றவராவார். அவர் இறந்து இவ்வருடம் செப்டெம்பர் மாதத்துடன் 25 ஆண்டுகள் கழிகின்றன. அவர் அரசியலுக்காக கம்யூனிஸ்ட் கட்சியையும், கல்விக்காக ஆசிரியத் தொழிலையும், கலை கலாச்சாரத்திற்காக அவர் வாழ்ந்த வண்ணார்பண்ணைப் பகுதியிலுள்ள சமூக நிறுவனங்களின் ஈடுபாட்டையும், மாநகரசபை வரியிறுப்போர் சங்க உறுப்புரிமைக்காக யாழ் மாநகரசபை அங்கத்துவப் பதவியையும் பயன்படுத்தினார். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இவர் தனது முழுக் கவனத்தையும் காலநேரம் பாராது, சாதிசமயம் பாராது, பிரதிபலன் நோக்காது செலுத்தியமைக்கான ஒரேயொரு காரணம் என்னவெனில் அவர் ஒப்பற்ற உன்னதமான சமூகப் பங்காளனாக சமூகத்தை நேசித்த தலைசிறந்த வழிகாட்டி. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை யாழ் மாவட்டத்தில் ஸ்தாபித்து, அதன் சித்தாந்தத்தை அன்றைய காலகட்டத்தில் அங்கு வேரூன்ற வழிவகுத்த சிறந்த போதனாசிரியர். இவர் இலங்கைக் கம்யூனிஸ்ட்டுக்களின் பரம்பரையில் முதற்பரம்பரையைச் சேர்ந்தவராவார்.

## இலங்கை வருகை

கார்த்திகேசனின் கம்யூனிஸ்ட் வாழ்கை நெறி, அவர் அன்றைய மலாயாவிலிருந்து இலங்கைப் பல்கலைக் கழக கல்லூரியில் மேற்கல்வி பெறுவதற்காக அவரது தகப்பனாரால் அனுப்பப்பட்ட காலம்தொட்டே ஆரம்பமானது. மலாயாவில் லண்டன் மெற்றிகுலேசன் படிப்பை முடித்துக்கொண்டு கொழும்பு வந்து கல்விகற்ற காலத்தில் பல்கலைக்கழக கல்லூரி விடுதியில் தங்கியிருந்தார். இவர் கலைப்பிரிவிலே கல்வி பயின்றபோது.

சமகாலத் தோழர்களான என். சண்முகதாசன், எல். ஆரிவன்ச, எஸ். கே. கந்தையா, ஏ. சிவலிங்கம் போன்றோரும் அங்கே கல்வி கற்றுவந்தனர். இக்காலகட்டத்திலே ஏ. வைத்திலிங்கம் அவர்கள் மேற்படிப்பிற்காக லண்டன் சென்றிருந்தார். மேற்குறிப்பிட்டவர்களில் என். சண்முகதாசன், எல். ஆரியவன்ச ஆகியோர் கார்த்திகேசனின் வகுப்பிலிருந்த சகபாடிகளாவர். இடதுசாரிப் போக்குடைய இத்தகைய மாணவர்மேல், முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், கணிதப் பேராசிரியருமான காலஞ்சென்ற சி. சுந்தரலிங்கம் அவர்களின் கடைக்கண் பார்வையும் விழுந்திருந்தது. இவர்களில் இன்று வாழ்பவர் முனனாள் உலக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவரும், இன்றைய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற்குழு உறுப்பினருமான எல். ஆரியவன்ச அவர்களே ஆகும். அக்காலகட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியின் மேற்பார்வையாளராக சுந்தரலிங்கம் அவர்கள் விளங்கினார்.

## பிறநாட்டுச் சூழ்நிலை

இக்காலகட்டத்திலே சோவியத் ரஷ்யாவிலேற்பட்ட அக்டோபர் புரட்சியின் தாக்கமும், மேற்கு நாடுகளிலேற்பட்ட விடுதலைப் போராட்டங்களும், ஸ்பானியக் குடியரசின் உதயமும், உலகளாவிய ரீதியில் மாணவர் மத்தியில் அரசியல் உணர்வைக் கூர்மைப்படுத்தின. பீற்றர் கெனமன் அவர்களும் வைத்திலிங்கம் அவர்களும் 1936 - 1939 காலப்பகுதியில் நடைபெற்ற ஸ்பானிய யுத்தத்தில். ஸ்பானியக் குடியரசிற்கு உதவுவதற்காக ஐக்கிய இராச்சியத்தில் இருந்துகொண்டே சர்வதேச தொண்டர் சபையில் சேர்ந்து பணியாற்றி வந்தனர். இந்நேரத்தில் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில் என். சண்முகதாசன் தலைமையில் மாணவர் கவுன்சில் ஒன்ற ஆரம்பிக்கப்பட்டு சோவியத் ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டு இருந்தது. எல். ஆரியவன்ச அவர்களே அந்தக் கவுன்சிலின் செயலாளராகக் கடமையாற்றினார். கார்த்திகேசன் அவர்கள் கவுன்சிலின் பிரச்சார நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, அரசியற் செய்திகள் கட்டுரைகளைத் தாங்கி வந்த “மாணவர்

செய்தி (ளுவரனநவெ நேறள)" என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

## கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பமும் முழுநேர ஊழியமும்

இந்தப் பின்னணியில், இளம் சோவியத் யூனியனுக்கு ஏகாதிபத்தியவாதிகளின் அச்சுறுத்தலேற்பட, உலகெங்குமுள்ள புரட்சிகரச் சிந்தனையுடையோர் சோவியத் யூனியனுக்கு ஆதரவாக இயக்கங்களை ஆரம்பித்தனர். இலங்கையிலும் "சோவியத் நண்பர்கள்" என்ற அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பின் முக்கிய பங்குதாரராக கார்த்திகேசன் இருந்தார். பின்னர் இந்த ஸ்தாபனம் பீற்றர் கெனமன், அ. வைத்திலிங்கம் ஆகியோரின் வருகையுடன் 1940 ம் ஆண்டளவில் ஐக்கிய சோ'லிஸ்ட் கட்சியாகப் பரிணமித்தது. 1943 ல் ஐக்கிய சோ'லிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டு டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், என். சண்முகதாசன், எல். ஆரியவன்ச போனறோருடன் கார்த்திகேசனும் சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். கட்சியின் பொதுச்செயலாளராக பீற்றர் கெனமனே பணியாற்றினார். கட்சியின் அடிப்படைச் சித்தாந்தம் மார்கஸிசம் - லெனினிஸமாகவே இருந்ததது. கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சிக்காக 1945 களில் கட்சி முழுநேர ஊழியர்களை நியமித்தது. படிப்பை முடித்துக்கொண்ட பல பல்கலைக்கழக மாணவர்கள் கட்சியின் வளர்ச்சியிலும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். டாக்டர் விக்கிரமசிங்கவைத் தவிர பல முக்கிய உறுப்பின்ர்கள் இந்தத் துறைகளில் முன்னின்று உழைத்தார்கள். கார்த்திகேசனை அவரது தந்தை இலங்கைக்கு அனுப்பி இங்குள்ள சி.சி.எஸ் (ஊ.ஊ.ளு சிலோன் சிவில் சேவிஸ்) அரச சேவையில் சேர்ப்பதற்கு விரும்பினார். ஆனால் கார்த்திகேசன் ஊ.ஊ". சிலோன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து கொண்டது தகனப்பாருக்குத் திருப்தியளிக்க வில்லையென அவர் அறிந்திருந்தும், இலங்கைத் தொழிலாள வர்க்கத்திற்கும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பணியாற்றவேண்டுமென்ற பேரார்வமும் அர்ப்பணிப்பும் அவரை ஒரு முழுநேர ஊழியனாக மாற்றியது.

பீற்றர் கெனமன் ஏரிக்கரைப் பத்திரிகை (டுயமந ர்ழரளந) ஸ்தாபனத்தில் வேலை செய்து அப்பதவியைத் துறந்தபின்னரே கட்சியின் பொதுச்செயலாளராகச் செயற்பட்டார். சண்முகதாசன் சி.சி.எஸ் அரச பதவியை ஒதுக்கிவிட்டு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முழுநேர ஊழியரானார். வைத்திலிங்கம் அவர்கள் அரச பதவிகளைத் தேடிச்செல்லாது தோட்டத்தொழிலாளர் மத்தியில் வேலை செய்வதற்காக மலைநாடு சென்றார். கார்திகேசன் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு கெனமனோடு சோந்து "போர்வார்ட் - குழசறயசன" பத்திரிகையை அச்சடித்து பிரசுரித்து, வினியோகித்து விற்பனை செய்து வந்தார். கட்சிக் காரியாலத்திலேயே வசித்தும் வந்தார். பெரிய அரசபதவிகள் தேடிவந்தும் அவற்றை தட்டிக்கழித்தார். கட்சிக்கு நிதி கிடைக்கும்போது முழுநேர ஊழியர்களுக்கு சிறிதளவு நிதியுதவி கிடைக்கும். நிதி இல்லாதபோது முழுநேர ஊழியர்கள் அனைவரும் க'டப்பட்டே கட்சி வேலைகளிலும், தொழிற்சங்க வேலைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

**கட்சி வேலையும், கல்விச் சேவையும்**

கம்யூனிஸ்ட் கட்சி அதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பொருட்டு கார்த்திகேசனை யாழ்ப்பாணம் செல்லுமாறும், அங்கு ஒரு தொழிலை மேற்கொள்ளுவதுடன், கட்சிப் பணிகளை மேற்கொள்ளுமாறும் பணித்தது. இதற்கமைய கார்த்திகேசன் யாழ்ப்பாணம் வந்து, நகரின் விக்டோரியா றோட்டில் வாடகை வீடொன்றில் வசிக்க ஆரம்பித்தார். அவர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். காலக்கிரமத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்ப கால உறுப்பினர்களாக ஆர். ஆர். பூபாலசிங்கம், எம். சி. சுப்பிரமணியம், ஏ. அற்புதரட்ணம், ஏ. சரவணமுத்து, இராமசாமி ஐயர் ஆகியோர் இருந்தனர். செயலாளராக கார்த்திகேசன் செயற்பட்டார். இவர்கள் மூலமாகவே கட்சி யாழ் மாவட்டத்தில் அறிமுகமானது. கார்த்திகேசன் யாழ் இந்துக்கல்லூரியில் காலடி எடுத்துவைத்த நாளிலிருந்தே கம்யூனிஸ்ட் இயக்கமும் யாழ் மாவட்டத்தில்

வேரூன்றியதென்றால் மிகையாகாது. கல்லூரியில் சிறந்த கணித, ஆங்கில ஆசிரியராகவும், கல்லூரிக்கு வெளியே ஒரு சிறந்த சமூக சேவையாளனாகவும், ஓர் அரசியல் போதனாசிரியராகவும், பார்வைக்கு எளிமையானவராகவும் விளங்கினார்.

கட்சியின் வேண்டுகொளின்படி யாழ்ப்பாணத் தொகுதிக்கு 1956 இலும் நல்லூர் தொகுதிக்கு 1960 இலும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டார். வாக்குரிமையற்ற மாணவர்களே எராளமாக இவரின் கூட்டத்தில் கூடிநின்றனர். அறிவுசெறிந்த அரசியல் தத்துவத்துடன்கூடிய, ஹாஸ்யம் நிறைந்த இவரின் பேச்சுக்களைக் கேட்கவே மாணவர்களும், வாலிபர்களும் இவரைச் சூழ்ந்து நின்றனர். யாழ்ப்பாணம் வந்தநாளிலிருந்தே துவிச்சக்கர வண்டியையே தனது நடமாட்டத்திற்குப் பாவித்ததனால் மக்களால் இவரை அன்புடன் அணுகமுடிந்தது.

யாழ் இந்துக்கல்லூரியில் 1946 இலிருந்து 1971 மே மாதம் வரை சேவை செய்தார். இதில் 1971 ஜனவரி தொடக்கம் அவ்வாண்டு மே மாதம் வரை அதிபராகக் கடமையாற்றினார். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரிய சங்கக் கூட்டங்களுக்கு இவரைப் பேச்சாளராக அழைத்தனர். மாணவர் மன்றங்களில் விசேட சொற்பொழிவுக்காக இவர் அழைக்கப்பட்டார். பிரபல்யமான பாடசாலைகளிலிருந்து வைபவங்களுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு உரை வழங்க வேண்டப்பட்டார். இதுதொடர்பாக கல்லூரி மாணவர்கள் இவரைத் தேடி வருவது சர்வசாதாரண நிகழ்வாகும்.

யாழ் இந்துக் கல்லூரியில் இவர் கடமையாற்றிய காலமே இவரின் பொற்காலம் எனலாம். சிறந்த அறிஞர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். யாழ் பல்கலைக்கழக வளாகம் ஆரம்பித்தபோது தலைவராகவும். பின்னர் பல்கலைக்கழகம் பலமாடிக் கட்டிடமாகப் பரிணமித்தபோது அதன் உபவேந்தராகவும் விளங்கிய பேராசிரியர் கைலாசபதியும் தற்போதைய உபவேந்தராக விளங்கும் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் இவரின் மாணவர்களேயாகும்.

1947 ல் இலவசக்கல்வி அறிமுகப்பட்ட காலம் தொட்டு 1976 யூன் 25 ம் திகதிவரை அதாவது கார்த்திகேசன் இளைப்பாறும்வரை அவர் கல்விக்காக ஆற்றிய பங்கு அபரிமிதமானது. வண்ணார்பண்ணையில் வாழ்ந்தபோது அவரின் வீடு காலையிலும் மாலையிலும் மாணவர்களின் வருகையால் நிறைந்திருக்கும். இவ்வாறு அவர் வீடு சென்றவர்களில் பலர் பின்னர் கட்சி உறுப்பினர்களாகவும் அனுதாபிகளாகவும் மட்டுமன்றி, காத்தி அபிமானிகளாகவும் மாறியுள்ளனர்.

1960 களில் இயங்கிய வில்மட் பெரேரா தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்குழு மகஜர் ஒன்று சமர்ப்பித்தது. அந்த மகஜரின் உள்ளடக்கமும் பின்னர் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மகஜருக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசனேயாகும்.

யாழ் குடாநாட்டிலும், நாட்டின் ஏனைய பாகங்களிலும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது இலவசக் கல்வி நடைமுறைப்பட்டதையடுத்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. 1974 ல் யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதும், அதன் தலைவராகத் தமது மாணவன் கைலாசபதி பொறுப்பேற்றது பற்றியும் அடிக்கடி பிரஸ்தாபித்து சந்தோசப்படுவது கார்த்திகேசன் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியிலுள்ள ஈடுபாட்டை எடுத்தியம்பியது. மேலும் யாழ் பல்கலைக்கழக விஸ்தரிப்பு இயக்கத்தின் உபதலைவராக விளங்கி , யாழ் பல்கலைக்கழக வளாகம் பல்கலைக்கழகமாக மாறவும், அது பரிபூரணமாக சகல பீடங்களையும் உள்ளடக்கவேண்டுமென குடாநாடு முழுவதும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்துவந்தார். இக்காலகட்டத்தில் அவர் இலங்கை தேசிய ஆசிரியரி சங்கத்தின் (சிறீலங்கா ஜாதிக குரு சங்கம்) உபதலைவராகவும் செயல்பட்டார்.

1960 தொடக்கம் 1971 வரையிலான காலத்தில் ஆசிரியர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தார். இதற்காக ஆசிரியர்

தொழிற்சங்க கூட்டக் கமிட்டியை பயன்படுத்தி 1960 ல் இலங்கை அரசாங்கம் நாட்டிலுள்ள பாடசாலைகளை அரசாங்க மயப்படுத்த உதவினார். 1968 ல் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றான சென் ஜோன்ஸ் கல்லூரியிலிருந்து, ஆசிரியரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததற்காக ஆர். பானுதேவனும் வேறு சில ஆசிரியர்களும் வேலைநீக்கம் செய்யப்பட்ட போது, ஆசிரிய தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைத்தார். மீண்டும் பானுதேவனுக்கு மேல்நீதிமன்றம் பாடசாலையில் வேலை வழங்குமாறு 1976 ல் உத்தரவு பிறப்பிக்கும்வரை தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டிக்கும். பானுதேவனுக்கும் உறுதுணையாக இருந்தார்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பிரகாரம், ஆசிரியர்கள் தத்தமது அரசியல் உரிமைகளை இழந்தனர். காத்திகேசனுக்கு "ஆ" என்ற ஆங்கில எழுத்திலும் "மு" என்ற எழுத்திலும், அலாதி விருப்பம். தனது கட்சிப் பெயரை மு. ஆயளைஉ யஎயளயபயச என மாற்றிக்கொண்டதுடன் எனக்கும் மு. ஆரவாவாரளயஅல என்ற பெயரைச்சூட்டினார். 1963 தொடக்கம் 1965 வரை கார்த்திகேசன் அரசியல் வகுப்புக்களை நடத்துவதில் மிகவும் அக்கறை காட்டி வடக்கிலுள்ள எண்ணற்ற கிராமங்களுக்குச் சென்றார். இவருக்கு உதவியாக க. ஜனகா பணியில் இறங்கினார். இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் யாழ் மகாநாட்டின் போதும் அதனைத் தொடர்ந்து 1964, 1965 களிலும் கூடுதலான உறுப்பினாகள் கட்சியில் சேர்ந்தனர். கணிசமான உறுப்பினர் வடமாராட்சிப் பகுதியிலிருந்து வந்தனர். 1965 ல் வடமாராட்சி நெல்லண்டையில் கவிஞர் பசுபதி அரங்கில் நடைபெற்ற மார்க்ஸிச கல்விப் பட்டறையில் முக்கிய மார்ஸிச கல்விப் போதனாசிரியராக விளங்கிப் பல முனனணித் தோழர்களை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஈர்த்தவர் அவரே.

கார்திகேசன் அவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராக இருந்த காலத்தோடு 1971 ஜனவரி மாதம் அதிபராக நியமிக்கப்பட்டு மே மாதம்வரை அங்கு கடமையாற்றிய பின்பு

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் அதிக நாட்கள் கடமை புரியவில்லை. எவ்வாறிருப்பினும் யாழ் இந்துக்கல்லூரியிலும் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியிலும் அதிபராகச் சேவைபுரிந்த காலத்தே அங்குள்ள ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அன்பிற்கும் மரியாதைக்கும் கட்டுண்டிருந்தார். 1972 ஜனவரி தொடக்கம் 1976 யூன் 25 வரை (அவரது பிறந்தநாள் யூன் 25) பண்டைத்தரிப்பு இந்துக்கல்லூரியிலே அதிபராகச் சேவை செய்த காலத்தே வட்டுக்கோட்டைப் பகுதியிலே பொதுமக்களின் அன்புக்குப் பாத்திரமானார். அப்பிரதேசத்திலேயே நடைபெற்ற சமூகப் பெருவிழாக்களில் பேச்சாளராகப் பங்குபற்றியதோடல்லாமல், சமூகசேவையாளராகவும் மிளிர்ந்தார். கட்சி நடவடிக்கைகளும் இக் காலகட்டத்தில் மந்த நிலையிலேயே இருந்தன. கார்த்திகேசனின் சேவையை மக்கள் தொடர்ந்தும் பெறுவதற்காகவே அவர் பண்டைத்தரிப்பு இந்தக்கல்லூரியிலிருந்து இளைப்பாறிய பொழுது அவருக்குப் பாடசாலை ஆசிரியர்கள் ஓர் தட்டச்சு இயந்திரத்தையும். துவிச்சக்கர வண்டியையும் அன்பளிப்புச் செய்ததுடன் கண்ணீர்மல்கிய பிரியாவிடையையும் வழங்கினார்கள்.

## கட்சியின் வளர்ச்சியும் பின்னடைவும்

1947 இலிருந்து 1963 வரை, யாழ் குடாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு அரசியல் தொழிற்சங்க, சமூக முன்னேற்ற நடவடிக்கைகள் மூலம் பலம் வாய்ந்த முதன்மையான இடதுசாரிக் கட்சியாக முன்னணிக்கு வந்தது. 1953 ஆகஸ்ட் இல் நடைபெற்ற சரித்திர முக்கியத்தவம்வாய்ந்த ஹர்த்தால் இடதுசாரிகளின் சக்தியையும், பலத்தையும் நாட்டில் துல்லியமாகப் பிரகடனப்படுத்தியது. இந்த ஹர்த்தாலின் பிரதிபலிப்பு 1956 ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்மூலம் வெளிக்காட்டப்பட்டது. காலம்சென்ற பொன்னம்பலம் கந்தையா அவர்கள் 1956 ல் பருத்தித்துறைத் தொகுதிக்கு கட்சி சார்பில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்து பல்வேறு மட்டங்களில் கட்சியின் செயற்பாடுகளில் காத்திகேசன், வைத்திலிங்கம், பொன். கந்தையா. எம்.சி. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, டாக்டர்

சு.வே.சீனிவாசகம், இராமசாமி ஐயர், சுபைர் இளங்கீரன் போன்றோர் ஈடுபட்டு வந்தனர். கட்சியின் தலைமையில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் அகில இலங்கை விவசாயிகள் சங்க சம்மேளனம், இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம். அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை, பின்னர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் வெகுவீச்சுடன் இயங்கி வந்தன. இவற்றின் பின்னணியில் அச்சாணியாக விளங்கியவர் கார்த்திகேசனேயாவார்.

1960 களில் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு), கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) என இரண்டாகப் பிரிந்தது. பின்னர் காலத்துக்குக் காலம் கருத்துவேறுபாடுகள் தோன்ற கட்சியின் பல முன்னோடி உறுப்பினர்கள் கார்த்திகேசன் உட்பட வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து சென்றனர். இந்நிகழ்வு கம்யூனிஸ்ட் அகிலத்திற்கு ஒரு பெரும் தாக்கமும் ந'டமுமாகும். இவற்றினால் கார்த்திகேசன் மிகவும் மனமுடைந்தேயிருந்தார். எவ்வாறு இருப்பினும் அவர் இறக்கும்வரை பல்வேறு கட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தோருடன் தொடர்புகளை வைத்திருந்ததோடு, அவர்களின் சுகதுக்கங்களில் கலந்து கொள்வதை பழக்கமும் வழக்கமுமாகக் கொண்டிருந்தார். இவர்களில் அவருக்குப் பின்னர் காலஞ்சென்ற வீ.ஏ. கந்தசாமி, டாக்டர் சு.வே. சீனிவாசகம், கே. டானியல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். வீ.ஏ. கந்தசாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலெல்லாம், அவர்மீது அன்புகாட்டி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று பணிவிடை செய்வார். இவ்விருவருடன் நானும் கூடிச்செல்வது வழக்கம்.

## கார்த்திகேசனும் நானும்

1952 ல் நான் யாழ் மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் மெல்லிய, சுதேச உடையுடன் சால்வை அணிந்த ஒருவர் எமது பௌதீக ஆய்வுகூடத்தில் முற்போக்கு எண்ணம் கொண்ட ஏ. ஈ. தம்பர் ஆசிரியருடனும்,

கம்யூனிஸ்ட் அபிமானியான எஸ். மகாலிங்கத்துடனும் அதிக நேரமிருந்து பேசிக்கொண்டிருந்தபோது, வகுப்பில் அமைதிகுறைந்து சத்தமேற்பட்டது. பின்பு அந்த மனிதர் சென்றுவிட்டார். தம்பர் எம்மைச் சிறிது கடிந்துவிட்டு, ஆங்கிலத்தில் "உங்களுக்கு அவரைத் தெரியுமா? அவர்தான் கார்த்திகேசன்" என்று கூறினார். அன்றுதான் நான் அவரை முதன்முறையாகப் பார்த்தது. அந்த வகுப்பில் அவரது சகோதரி செல்வி முருகபிள்ளையும் படித்தது எனது ஞாபகம். பின்னர் அதே ஆண்டு ஹர்த்தால் வெற்றிக்கூட்டத்தில் கார்த்திகேசனின் பேச்சுக்கு கைதட்டினேன். பின்பு ஒருமுறை நல்லூர்க் கோயிலுக்கு அண்மையிலமைந்திருந்த இராமசாமி ஐயரின் புத்தகசாலையில் "மக்கள் கொரியாவுக்கு ஜே" என்றொரு புத்தகத்தை நான் வாங்கியபோது என்னுடன் பேசினார். சிலநிமிட நேரம் கதைத்துவிட்டு நான் கல்லூரி விடுதிக்குச் சென்றுவிட்டேன். அந்தக் காலத்தே மத்திய கல்லூரி விடுதிச்சாலை மாணவர்களாகிய நாம் ஓர் வேலைநிறுத்தம் மேற்கொண்டோம். நாம் நடாத்திய வேலைநிறுத்தக் கூட்டத்தில் கார்த்திகேசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அன்று அவருடன் பேசும் வாய்ப்புக் கிட்டியது. பின்னர் 1956களில் பொன். கந்தையா அவர்களின் தேர்தல் பிரச்சாரத்திற்காக நெல்லியடிக்கு அடிக்கடி வருவார். அப்போதும் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு நண்பர்களாகவும் தோழர்களாகவும் பரிணமித்து விட்டோம். 1956 க்குப்பின் காலம் சென்ற கரவைக் கந்மசாமியும் நானுமாக ஆரம்பித்த வடமராட்சி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்திற்கு அடிக்கடி வருகைதந்து அரசியல் வகுப்புக்களை நடாத்தி எண்ணற்ற வாலிபர்களை கம்யூனிஸ்ட் வாலிபர்களாக மாற்றி வெற்றிகண்டார். இவ்வாறு அவர்மீது எனக்கு ஏற்பட்ட பாசமும், நேசமும், தோழமையும் கலந்த நட்பு அவர் இறக்கும்வரை தொடர்ந்திருந்தது.

வருடத்தின் யூன் 25ம் திகதி எனக்கும் கார்த்திகேசனுக்கும் ஒரு சிறந்தநாள். மகிழ்ச்சியான நாள். அதுதான் அவரின் பிறந்தநாள். என் மகன் மகிந்தனின் பிறந்தநாளும்கூட. நான் நல்லூரில் வசித்த நாட்களில் மகனின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வருகைதந்து. தனது பிறந்தநாளையும் கொண்டாடி மகிழ்ந்து, தனது நகச்சுவை ததும்பும் பேச்சினால் அங்கு வந்த அனைவரையும் எனது

குடும்பத்தினரையும் மகிழ்ச்சியில் குதூகாலிக்க வைத்துச் செல்வார். இந்தப் பசுமையான நினைவுகள் என் மனதைவிட்டு என்றும் அகலாதவை.

கார்த்திகேசன் மறைந்து 25 ஆண்டுகள் கழிந்திருக்கும் இவ்வேளையில், மார்க்ஸிச வாதிகளான எமக்கு அவரது வாழ்க்கை ஒரு முன்னோடி உதாரணமாகும். மார்க்ஸிச தத்துவம் என்றும் அழியாதது. மனிதகுலம் இருக்கும்வரை நிலைத்திருக்கும். கார்த்திகேசன் மாாக்ஸிசத்திற்கு அளித்த பங்கு என்றும் இலங்கையிலுள்ள தற்போதைய, வருங்காலத்தைய மார்ஸிஸ்டுகளால் நினைவுகூரப்படும்.
காத்தி நாமம் நிலைக்கட்டும்.

எம். குமாரசாமி
நீண்டகால கட்சித் தோழரும்,
இளைப்பாறிய் பாடசாலை ஆசிரியருமாவார்.

இக்கட்டுரை நவம்பர் 2002 ல் வெளியிடப்பட்ட
"கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்"
என்னும் நூலில் பிரசுரமாகியது.

# சிறந்த சிந்தனாவாதி

திரு மு. கார்த்திகேசன் M.A
அவர்களின் **மதிப்புரை**

"கொட்டாவி விட்டதெல்லாம்
கூறுதமிழ் பாட்டாச்சு
முட்டாளே இன்னுமா பாட்டு".

இதைப் பாடியவன் புதுமைப்பித்தனாகும். கொட்டாவி எந்த நோக்கோடும் வெளியாவதில்லை. அதேபோல் நிலையான நோக்கின்றி, கருத்தின்றி எழுதப்படும் பாட்டுக்களைத்தான் புதுமைப்பித்தன் இப்படி நையாண்டி செய்திருக்கின்றான். ஆனாலும் இந்தச்சூட்டிற்குப் பின்னும் கொட்டாவி ரகத்தில் பாட்டுக்கள் எழுதிக் குவிக்கப்பட்டு வருவது இக்கிய உலகிற்கு மிகவும் துர் அதி'டமே. ஆனால் இந்த இளம் கவிஞனின் பாட்டுக்கள் இந்த ரகத்திலிருந்து விடுபட்டு நிற்பதை எவராலும் உணரமுடியும்.

சமூக சீர்கேட்டைக் குத்திக்காட்டி, அச்சீர்கேட்டை அழிப்பதற்கு சமூக அமைப்பையே மாற்ற வழிகூறி, அதனை மாற்றும் சக்திகளுக்கு வீச்சும், வேக்கும், வைராக்கியமும் அளிப்பதே இலக்கியத்தின் இலக்கணமாகக் கொண்டால், இந்தக் கவிதைத் தொகுப்பு இவ்விலக்கணத்திற்கு உட்பட்டதேயென்று பெருமையுடன் கூறலாம்.

பயம் என்பது ஓரு கொடு நோய். அது ஓருவனிடம் ஒட்டிக்கொண்டால், அது அவனுக்கும் மற்றவர்களுக்கும் கெடுதியே விளைவிக்கும். உலகிற்கெல்லாம் உபதேசிக்கும் எழுத்தாளனுக்கு பயம் என்பது பிடித்துவிட்டாலோ, அது அவனை அபுஞ்சகமாக்கி, நீதிக்கும் அநீதிக்கும் சமரசங்கண்டு, அதில் அவனை சங்கமமாக்கிச் சமைத்துவிடும். இப்படிச் சங்கமமாகிய எழுத்தாளர்கள் சமூகத்தின்மேல் படர்ந்த குருவிச்சையாவர். இதற்கு விதிவிலக்காகி நெஞ்சுரத்தோடும் துணிவோடும் சரியெனப்பட்டதைத் தனது கவிதை மூலம் ஒழிவுமறைவின்றி எடுத்துரைத்திருக்கும் இவ் இளைஞனின் முணிவை நினைக்க நெஞ்சம் பூரிக்கிறது.

"இலக்கண வரம்புக்குள்ளே
இருந்து நான் கவிதை பாடும்
உலக்கையன் அல்லேன் சும்மா
உளறிட மாட்டேனென்னால்
துலங்கிடும் புரட்சி ஓர் நாள்
துவங்கிடுமப்போ பாக்கள்
வலக்கையாய் நின்று வாழ்த்தி
வழிவிடும் ஏழைக்காக".

இப்படி ஒரு பாட்டொன்றைப் பாடி துணிச்சலுக்கான இலக்கணத்தையே அடைந்துவிட்டார் இந்த இளம் கவிஞன்.

" கருத்துக்கு மொழி சேவகம் செய்வதா?, அல்லது மொழிக்கு கருத்து சேவகஞ் செய்வதா?" என்ற கேள்விக்கு எழுத்தாளர்கள் பலரே இன்னும் முடிவுகாண இயலாது நிற்கின்றனர். இக்கவிதைத் தொகுதியை நன்கு படித்தால், இதற்கான முடிவை இலகுவில் காணலாம். சமீபத்தில் நம்மைவிட்டுப் பிரிந்த கவிஞன் பசுபதி அவர்களின் நுர்லொன்றிற்கு அணிந்துரை வழங்கிய தான்தோன்றிக் கவிராயர் என்பவர்

"சிந்தையால் வாக்கால் செம்மைச்
செய்கையால் புரட்சி உய்க்க
செந்தமிழ் செங்கொடிக்குச்
சேவகஞ் செய்ய வைக்க
வந்த மா மனிதனான
பசுபதிக் கவிஞன் காயம்
வெந்தழல் உண்டும் வாழும்
வித்தகன் உயிர் இப்பா நூல்"

என்ற ஒரு பாடடினை யாத்ததன் மூலம் எது எதற்காகச் சேவகஞ் செய்யவேண்டும் என்பதனையும், எதற்காகச் செய்யவேண்டும் என்பதனையும் கவிஞன் பசுபதி எப்படிச் சேவகஞ் செய்யவைத்தார் என்பதனையும் சுட்டிக்காட்டிய கூற்று இந்த இளம் கவிஞனின் கவிதைகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

" மலையினைச் சாடவல்ல
மாபெரும் உழைப்பாளர்கள்

அலையினை எதிர்த்து நீந்தும்
        ஆயிரம் இளஞ் சிங்கங்கள்
விலையிலா மாணிக்கங்கள்
        வித்தகர் புலமை மிக்கோர்
நிலைபெறு கூட்டமைத்தே
        இதற்கொரு முடிவு காண்போம்".

இது கவிஞன் பசுபதியின் கவிதைகளில் ஒன்றாகும். கொடுமைகளுக்கு முடிவுகாண எடுக்கப்பட்ட சபதமாகும்.

"

விதைத்தவ னறுத்தல் நீதி
        வீதியிற் சும்மா வாயால்
அளப்பவன் தலைமை யேற்கும்
        அழிநிலை போக்கி யிங்கு
உழைப்பவன் கோடிகள் தூக்கி
        உரிமையைக் கேட்டாலங்கு
முளைத்திடும் புரட்சி தன்னில்
        முடியுமே சுரண்டல் ஆட்சி".

இது இந்தக் கவிஞனின் கருத்தாகும். பசுபதியின் சபதம் இந்தக் கவிஞனால் ஏற்று வளர்க்கப்படுவதையும் காண முடிகிறது. ஒரே உணர்வு, ஒரே நோக்கம், ஒரே முடிவு தெரியக் காண்கின்றோம். காலம் எப்போதாவது பின்னோக்கி ஓடுவதில்லை என்பதும், இக்கியமும் விதிவிலக்கல்ல என்பதையும் உணர்கிறோம்.

மாவிட்டபுரம் தொட்டு வியட்னாம் வரை புரட்சிப் பார்வை கொண்ட இக் கவிஞனின் பாக்களில் போராட்டம் என்ற பேரொலியைக் கேட்கின்றோம். இதுவே சங்கநாதம், மக்கள் போராட்டத்தில் பிறந்த இவரின் புலமை காலகதியில் தாண்டவமும் ஆடும் ஆயுதம் ஏந்தி.

(இக் முன்னுரை 1970 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட, புதுவை இரத்தினதுரை அவர்களின் "வானம் சிவக்கிறது" என்னும் கவிதைத் தொகுதிக்கு எழுதப்பட்ட மதிப்புரையாகும்)